14th August 1956]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இவர்களையெல்லாம் அந்தமானுக்கு அனுப்புவது என்றால் முடியாது. இவர்கள் எல்லோரும் அங்கே செல்வதற்குத் தயாராக இருக்கிறார்களா, இவர்களை அனுப்பினால் என்ன என்ன வசதிகளை அரசாங்கம் செய்யவேண்டும் என்பதையெல்லாம் பரிசீலனை செய்துதான் இவர்களை அந்தமானுக்கு அனுப்ப முடியும்.

SRI E. L. RAGHAVA MUDALIAR : May I know the qualifications necessary for the people to be sent to the Andamans?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I would like to have notice, Sir.

SRI T. C. NARAYANAN NAMBIAR : May I know from the Hon. Minister whether there are elementary schools in the Andamans for catering to the educational needs of the children and, if so, whether such institutions are run by private management or by the State itself?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I am sorry I do not have that information with me just now.

SRI S. SWAYAMPRAKASAM : Is it not a fact that the families who have been sent to the Andamans for settlement have returned because proper facilities were not provided there?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I do not have any such information with me.

Additional cement factories

* 97 Q.—SRI N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state whether there is any proposal to construct additional cement factories in the State?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir.

SRI M. KALYANASUNDARAM : நமது ராஜ்யத்தில் இன்னும் அதிகமாக சிமெண்ட் தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதற்கு உத்தேசம் இருக்கிறதா, இல்லையா என்ற கேள்விக்கு கனம் மந்திரி அவர்கள் 'இல்லை' என்று பதில் சொல்லிவிட்டார்கள். அப்படியானால், நமது ராஜ்யத்தில் இப்போது உற்பத்தியாகும் சிமெண்ட் போதுமானது என்பது கனம் மந்திரி அவர்களின் அபிப்பிராயமா ? தற்போது மூட்டை ஒன்றுக்கு ரூ. 11 அல்லது ரூ. 13 கொடுத்தாலும் சிமெண்ட் கிடைப்பதில்லை. இதற்குக் காரணம் என்ன என்பதை சர்க்கார் பரிசீலனை செய்திருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்போது சிமெண்டுப் பற்றாக்குறை இருப்பது சர்க்காருக்கும் மிகவும் கவலை யளித்து வருகிறது. இதனால் சர்க்காருடைய வேலைகளும் தடைபடுகின்றன. திடீரென்று இவ்வளவு பற்றாக்குறை ஏற்பட்டிருப்பதன் காரணத்தை சர்க்கார் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. கொஞ்சம் ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது. ஏற்றுமதி செய்வதைத் தடுக்கவேண்டாமா என்றும் அரசாங்கம் யோசித்துக்கொண்டிருக்கிறது

இப்போதுள்ள சிமெண்டுத் தொழிற்சாலைகளை விருத்திசெய்வதற்கு மனுக்கள் வந்திருக்கின்றன. அவைகளை அரசாங்கம் கவனித்து வருகிறது. இப்போதுள்ள சிமெண்டு உற்பத்தியைப் பெருக்குவதற்கு திட்டம் வகுக்கப்பட்டு அதை

[14th August 1956

சிமெண்டு உற்பத்தியாளர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். சிமெண்டுத் தொழிற்சாலைகள் இன்னும் அவசியமாக இருக்கலாம் என்பதுதான் சர்க்காரின் அபிப்பிராயம். சமீபத்தில் உதகமண்டலத்தில் இருந்தபோது இந்த விஷயத்தையும் சர்க்கார் கவனித்தது. இப்போது இந்த சிமெண்டுத் தொழிலும் தனியார் துறையில்தான் இருக்கவேண்டும். ஆகவே சிலரை இன்னும் சிமெண்டுத் தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதற்குத் தயாராக இருக்கிறார்களா என்று கேட்டோம். கோயம்புத்தூரிலுள்ளவர்களை "நீங்கள் வேண்டுமானால் இன்னொரு சிமெண்டு தொழிற்சாலை வைத்துக் கொள்ளலாம். நாங்கள் அதற்கு உதவி செய்கிறோம். நீங்கள் தொழிற் சாலைகள் ஆரம்பிக்கிறீர்களா ?" என்று கேட்போம். ஆனால் சமீபத்தில் அவர்களிடமிருந்து நாங்கள் கேள்விப்பட்டது இதுதான். அதாவது, அவர் கள் சில மூலப்பொருள்கள் குறிப்பிட்ட இடத்தில் கிடைத்தால் தொழிலை ஆரம்பிப்பதாக இருந்தார்கள். அந்த மூலப் பொருள்கள் குறிப்பிட்ட இடத்தில் கிடைக்கவில்லை என்று தெரிகிறது. அந்த மூலப் பொருள்கள் தென் ஆற்காடு ஜில்லாவில் கிடைப்பதாகத் தெரிகிறது. ஆகவே, புதுச் சேரியில் சிமெண்டுத் தொழிற்சாலையை ஏற்படுத்துவதற்கு மத்திய அர சாங்கத்தை அனுமதி கேட்டிருந்தார்கள். அதற்கு வேண்டிய மூலப் பொருள்கள் தென் ஆற்காடு ஜில்லாவில் இருப்பதால் புதுச்சேரியில் சிமெண்டு தொழிற்சாலையை ஏற்படுத்துவதில் மத்திய சர்க்காருக்கு ஆட் சேபனை உண்டா என்று கேட்டிருந்தார்கள். ஆட்சேபனை இல்லை என்று பதில் வந்தது. இதுதான் இப்போதைய நிலை. இன்னும் யாராவது சிமெண்டு தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கு முன்வந்தால் அவர்கள் விண்ணப்பத்தையும் சர்க்கார் அக்கறையோடும் அனுதாபத்தோடும் கவ னிக்கும்.

Sri V. R. NAGARAJAN : Is it a fact that cement has become scarce in the public market on account of the nation-building activities of the State? If not, is it due to underproduction in cement factories which are already existing in the State?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : I do not think there has been any underproduction. Of course, there are numerous nation-building activities and even in the private sector more constructions are perhaps coming into existence.

Sri V. C. PALANISWAMI GOUNDER : The Government and the public are aware of the scarcity of cement. May I ask the Government whether they can make an investigation into the matter and see that the manufacture of cement is done on a cottage industry basis so that the production may be speeded up?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : I do not know whether it is a feasible proposition to organize the manufacture of cement on a cottage industry basis in order to meet the growing demands of it.

Sri M. KALYANASUNDARAM : இப்போதிருக்கும் சிமெண்டுப் பற்றாக்குறையைப் போக்குவதற்கு இனிமேல் தொழிற்சாலைகளை ஆரம்பிப் பதற்கு நடந்துகொண்டிருக்கும் ஆலோசனைகளைக் காட்டுவதானது வேகிற வீட்டுக்கு வெட்டுகிற கிணற்றைக் காட்டுவதுபோல் இருக்கிறது. இப்போது நமது ராஜ்யத்திலுள்ள மூன்று சிமெண்டுத் தொழிற்சாலைகளிலுமாக உற்பத்தியாவது—எனக்குக் கிடைத்திருக்கும் விவரங்கள் சரியாக இருக்கு மென்று நம்புகிறேன்—53,000 டன்கள். இதில் 37,000 டன்கள் மத்திய சர்க்காருக்கு அனுப்பப்படுகிறது என்பது உண்மையா ? மேலும், வெளி நாடுகளிலிருந்து இறக்குமதியாகும் சிமெண்டில் நமது ராஜ்யத்திற்கு ஒரு மூட்டைகூட ஒதுக்கப்படுவதில்லை என்பதும் உண்மையா ?

14th August 1956]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : புதிதாகத் தொழிற்சாலை ஆரம்பிப்பதுபற்றி கேள்வி கேட்கப்பட்டது. ஆகையால் இப்போதைய சிமெண்டுப் பற்றாக்குறைக்குக் காரணம் என்ன என்பது பற்றி நான் பதில் சொல்லவில்லை. நமது ராஜ்யத்தில் இப்போதுள்ள மூன்று சிமெண்ட் தொழிற்சாலைகளில் வருஷத்திற்கு 6,65,000 டன்கள் சிமெண்ட் உற்பத்தியாகிறது. மற்ற ராஜ்யங்களோடு ஒப்பிட்டுப்பார்க்கும்போது நமது ராஜ்யத்தில் போதிய சிமெண்ட் உற்பத்தியாகிறது என்ற காரணத்தால் வேறு சிமெண்டை இங்கே மத்திய சர்க்கார் அனுப்புவதில்லை. ஆனால் இந்த "அல்லாட்மெண்ட்"-ஐ சரியாக மாற்றியமைக்க வேண்டுமென்று இந்த அரசாங்கம் யோசித்துக்கொண்டிருக்கிறது.

SRI M. PALANIYANDI : சிமெண்டை வினியோகம் செய்வதில் பல 9-50
தகராறுகள் இருக்கின்றன. ரயில்வேக்களுக்கு ஒதுக்கும்போது இந்த a.m.
மண்டலத்திற்கு (ஜோன்) அனுப்பவேண்டும் இந்த மண்டலத்திற்கு அனுப்பக்கூடாது என்றிருக்கிறது. மேலும் புது ஏஜெண்டுகளுக்கு அதிகமாக சிமெண்ட் கொடுப்பது காரணமாக சிமெண்டில் கள்ளமார்கெட் ஏற்பட்டிருக்கிறது. எந்த எந்த ஏஜெண்டுகளுக்கு எவ்வளவு சிமெண்ட் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைக் கணக்கெடுத்துப் பரிசீலனை செய்தால் கள்ளமார்கெட் நடப்பது தெரியும். அப்படிச் செய்து சிமெண்டின் கள்ள மார்க்கெட்டை ஒழிப்பதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர் அவர்களுக்கு சிமெண்ட் விவகாரம் சற்று அதிகமாகத் தெரியும். என்னிடம் வந்து குறிப்பாக அவர்களுடைய யோசனையைத் தெரிவித்தால் அதையெல்லாம் கவனித்து வேண்டியதைச் செய்யலாம்.

SRI S. THINAKARASAMY THEVAR : May I know from the Hon. Minister whether it is a fact that Sarkar Ooruni area contains all raw materials for the manufacture of cement and is well suited for starting a factory for that purpose, and may I also know whether the Government will come forward to set up that industry in that famine stricken area which will incidentally eradicate famine conditions prevailing there?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I have no information about the exact suitability of Sarkar Ooruni area for the manufacture of cement.

SRI K. R. NALLASIVAM : இப்பொழுது ஏற்பட்டிருக்கும் சிமெண்ட் பஞ்சத்திற்குக் காரணம் வியாபாரிகள் அதிகமான லாபத்திற்கு சிமெண்ட் விற்கவேண்டுமென்ற நோக்கத்துடன் மறைத்து வைப்பதுதான் என்பதை நேரடியாகப் பார்த்தேன். இப்பொழுது இருக்கும் முறையில் சிரமங்கள் இருப்பதால் வியாபாரிகள் மூலமாக சிமெண்ட் வினியோகிக்கப்படுவதற்குப் பதிலாக சர்க்காரே நேரடியாக வினியோகிக்க ஏற்பாடு செய்தால் இந்தக் குறை நீங்குமென்று நினைக்கிறேன். இதைப்பற்றி சர்க்கார் ஆலோசிப்பார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பற்றாக்குறை ஏற்படும் போதுதான் கள்ளமார்க்கெட் விவகாரம் வருகிறது. பற்றாக்குறை ஏன் ஏற்படுகிறது என்றும், பற்றாக்குறை இல்லாமல் பார்த்துக்கொள்ளவேண்டிய முறைகள் என்ன என்பதையும் அரசாங்கம் முக்கியமாகப் பரிசீலனை செய்யும். அதற்குமேல் எங்கெங்கே தவறுதல் நடக்கின்றனவோ அதையும் பரிசீலனை செய்து தவிர்ப்பதற்கும் அரசாங்கம் கவனம் செலுத்திவருகிறது.

SRI V. BALAKRISHNAN : சிமெண்ட் தயாரிப்பதற்கு வேண்டிய மூலப்பொருள்கள் புதுக்கோட்டைப் பகுதியில் இருக்கிறபடியால் கனம் மந்திரி அவர்கள் களிகூர்ந்து கோயமுத்தூர் தொழில் பிரபுக்களின் மனதை புதுக்கோட்டை பக்கம் திருப்புவார்களா ?

[14th August 1956

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கோயமுத்தூர் பிரபுக்களின் மனதைத் திருப்பக்கூடிய ஆற்றல் எனக்கு இருக்கிறதென்று நான் நினைக்கவில்லை. புதுக்கோட்டைப் பகுதியில் மூலப்பொருள்கள் இருந்தால், அங்கு சிமெண்ட் உற்பத்தி செய்வதைப் பரிசீலனை செய்யலாம். பிரபுக்களின் மனதைத் திருப்புவதற்கு கனம் அங்கத்தினரிடம் போதிய ஆற்றல் இருக்கிறதென்பது மட்டும் எனக்குத் தெரியும்.

SRI V. K. RAMASWAMI MUDALIAR : May I know whether it is a fact that the defective distribution is due to the taking over of the entire thing by the State Trading Corporation?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : This new system has been undertaken because of the defects found in the distribution of cement and also because of cement shortage.

SRI M. KALYANASUNDARAM : சிமெண்ட் உற்பத்தியைப் பெருக்குவதற்கும் நம்முடைய ராஜ்யத்திற்கு 'அலாட்மெண்ட்'டை அதிகப்படுத்துவதற்கும் எடுக்கக்கூடிய நடவடிக்கையோடுகூட, கிடைக்கக்கூடிய சிமெண்டை சரியானபடி விநியோகிப்பதற்கும் தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன். திருச்சி ஜில்லா 'ப்ளானிங்' போர்டு கூட்டத்தில் இந்த விஷயத்தைப்பற்றி நான் பேசும்போது அங்கிருக்கும் அதிகாரிகள் சிலரும் தங்களுடைய கஷ்டத்தையும் தெரிவித்தார்கள். ஸ்தல அபிவிருத்தித் திட்டத்திற்கு வேண்டிய சிமெண்டுக்கு வேண்டிய பர்மிட் இருந்துங்கூட சிமெண்டை 'ஸ்டாக்' செய்பவர்கள் மதிப்பதே இல்லை என்று அங்கு இருக்கும் அதிகாரிகள் பரிதாபமாகச் சொன்னார்கள். அப்படியிருக்கும்போது விநியோகத்தை வியாபாரிகளிடமிருந்து மாற்றுவதற்கு சர்க்கார் ஏதாவது ஆலோசிப்பார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதுபற்றியும் மத்திய சர்க்காருடன் கலந்து கவனம் செலுத்திவருகிறோம்.

SRI M. NARAYANA KURUP : Has it come to the notice of the Government that the greatest sinners in blackmarketing are those contractors and persons engaged in the Community Project areas and National Service schemes and, if so, whether the Government propose to take any steps?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I do not think the hon. Member is correct.

SRI M. KALYANASUNDARAM : I request that questions Nos. 98, 100-H and 100-I may be taken up together as they deal with the same subject.

MR. SPEAKER : Yes, all the three questions will be taken up together.

(Questions 98, 100-H and 100-I taken together.)

Allotment and distribution of iron and steel

* 98 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) the total number of registered stock-holders who are authorized to hold stocks of iron and steel;

(*b*) how many stock-holders there are in each zone;

(*c*) the quantity of iron and steel allotted for each zone; and

(*d*) the basis on which such allotment is made?